Arimā Nōkku

# அரிமா நோக்கு

5:3 அக்டோபர் 2011

ரூ.20

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
5:3 அக்டோபர் 2011

எண்களும் எண்ணங்களும் - வ. ஜெயதேவன் 03
குப்பன் பிள்ளைத் தமிழ் 07 - அ. சீனிவாசராகவன்
சங்க இலக்கியமும் உணர்வு சால் நுண்ணறிவும் 11 - ம. திருமலை
தமிழ் எழுத்தும் கிரந்த எழுத்தும் - சோ. ந. கந்தசாமி 18
What Libraries Mean to The Nation - *Eleanor Roosevelt* 24
Tradition and Innovation Kulothungan's Craftsmanship - *Marudanayagam* 31
மொழியும் எழுத்தும் - சா. கந்தசாமி 34
சுயமாக விடை எழுதும் கருத்தறிதல் என்றால்...* - சீதா லட்சமி 38
Quantifying Syntactic Aspects of Language (w.r.t Phrase) for the purpose of Testing - *R. Shakuntala* 46
வேற்றுமைகள் -ஏ. ஆதித்தன் 49
சிமோன் தி பௌவாயர் (1908-1986) - இரா. பிரேமா 58
தமிழுரைக் கட்டிப் போட்டதா கருமவினைக் கொள்கை? - க. நெடுஞ்செழியன் 63
The Future of Poetry - *Kate Middleton* 69

மற்றும்
நூல். ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள். துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## மக்களாட்சி மாண்புகள்

மக்களாட்சிப் பரிமாணத்தில் தேர்தல்கள் முதன்மையான இடம்பெறுகின்றன எனினும் முதன்மையும் முக்கியமுமான இடத்தில் மக்களாட்சிப் பயன் களாகிய மக்கள் நலவாழ்க்கை, கல்வி, தொழில் வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு ஆகியனவே உள்ளன. மக்களாட்சி முறைமை ஒரே கட்சி ஆட்சியையோ அதன் தொடர்ந்த நீட்சியையோ நடத்த வழிவகுக்கும் என்று கருத இயலாது. கட்சிகள் இணைந்து அரசு அமைப்பதும், அப்படி அமைக்கப்பட்ட அரசு, தனது இணைவுநிலைக் கட்டமைப்பு நெகிழும் போது விழுவதும் புது இணைவுகள் ஏற்படுவதும் உண்டு. எப்படி அமையினும் எத்தனைக் காலம் பதவியில் இருப்பினும், தனியார்நலம், கட்சிநலம் எல்லாம் கடந்ததாயிருந்தாலன்றி மக்களாட்சிக்கோட்பாடு அதற்குரிய உண்மைத்தன்மையோடு இருப்பதாகக் கருதமுடியாது புதுவதாக ஒரு கட்சி அல்லது கட்சிகளின் இணைவு. ஓர் அரசை மக்களாட்சித் தேர்தல்வழி நிறுவும்போது அவ்வரசின் ஆட்சி, தான் எந்தக் கட்சி அல்லது கட்சிகளை வென்று வந்ததோ அதனை அல்லது அவற்றை அழிப்பதற்காகத் தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது. வாக்களித்த மக்கள், தமக்கு நல்ல ஆட்சியமைப்பு தேவை என்று ஒரு கட்சிக்கு வெற்றி தருகின்றனரே அன்றி அக்கட்சிக்கு எதிரான கட்சியை ஒழித்துக்கட்டுவதற்காக அன்று.

வெற்றிபெற்று அரசு நிறுவும் கட்சி தனது ஆட்சி முறையால் வெற்றி பெற என்ன செய்யலாம்? மக்கள்நலம் நாடிப் புதுப்புதுத் திட்டங்களை வகுத்துத் திறமையின்மைக்குக் கதவு திறக்காமலும் ஊழலோடு உறவு முறை வைத்துக்கொள்ளாமலும் பகட்டு விளம்பரங்களுக்கும், சுயநல வேட்டைகளுக்கும் இடம்தராமலும், நேர்மையான ஆட்சியை மக்களுக்கு வழங்க வேண்டும். ஓர் அரசு தனக்கு முந்தைய அரசு நடைமுறைப் படுத்திய திட்டங்களில் நல்லனவற்றைத் தொடந்து பின்பற்றுவது பெருமைக் குறைவான செயலன்று. முந்தைய அரசின் திட்டங்களில் குறைகள் இருப்பினும் திருத்தங்கள் பொருத்தினால் அவை தேவையானவயே என்னும் நிலையிருப்பின் அத்திட்டங்களை அவ்வாறு செப்பம் செய்து தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாம். முந்தைய அரசின் எத்திட்டமேனும் மக்களால் வெறுக்கப்பட்டதெனில். எத்திட்டமேனும் பொதுப்பணத்தை வீணடிக்கிறதெனில் அத்திட்டத்தை அகற்றவேண்டும் என்னும் முடிவிலேயே மக்கள் புதிய ஆட்சியைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் எனில் அத்திட்டத்தை நிச்சயமாக உடனே அகற்றிவிடலாம். ஆக்கம்மிக்க வாழ்க்கையை மக்களுக்கு வழங்கவல்ல திட்டங்களைப், பொறுப்பேற்ற புதிய அரசு நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களைக் கவர எத்தடையும் மக்களாட்சிக் கோட்பாட்டில் இல்லை. எதிர்க்கட்சிகளே இல்லாத நிலையை உருவாக்குவதை. மக்கள் ஒப்பினாலும், அவர்கள் மதிக்கும் மக்களாட்சிமுறைமை அதனை ஒருபோதும் ஒப்பாது. வரம்பில்லாத வல்லதிகார ஆட்சியை வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுப்பது போன்ற தீமை வேறு எதுவும் இல்லை.

♦



*A man who dares to waste one hour of time has not discovered the value of life.*

- Charles Darwin

(12 February 1809 – 19 April 1882)

An English naturalist who established that all species of life have descended over time from common ancestry, and proposed the scientific theory that this branching pattern of evolution resulted from a process of natural selection.




*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 15, 000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 10, 000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 3, 000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 1, 500 |

***தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.***


அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com

மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com

செல்: 9380626448